1970 மார்ச் 4]

கடல் நீரைக் குடிநீராக்கல்

* 208. வினா.—திரு. என் கிட்டப்பா

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்து வெளிநாட்டு நிபுணர்கள் யாருடனாவது மாநில அரசு கலந்தாலோசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், இத்திட்டம் செயல்படுத்தப்படும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) கடல் நீரைக் குடிநீராக மாற்றுவது குறித்து நமது அழைப்பின்பேரில் 1964-ல் சென்னைமாநகருக்கு வந்த ஐக்கிய நாடுகள் வல்லுநர் குழுவைக் கலந்து அரசாங்கம் ஆய்வு செய்தது. நகரத்திற்குக் குடிநீர் வழங்குவதைப் பெருக்குவதற்காக இதைவிடக் குறைந்த செலவுள்ள பிற திட்டங்கள் நிறைவேற்றப்படும் வரையில் இத்திட்டத்தைத் தள்ளி வைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1964-ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த முயற்சியின்படி கடல் நீரைக் குடிநீராக ஆக்குவதற்கு எவ்வளவு செலவு ஆகும் என்று சொன்னார்களா ? அது ஏன் ஒத்திவைக்கப்பட்டது ? அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, 1964-ஆம் ஆண்டு யு.என். எக்ஸ்பர்ட் டீம் வந்து பரிசீலனை செய்தார்கள். அதற்காக வேண்டிய செலவு அதிகமாக இருக்கும் என்று புள்ளி விவரம் கொடுத்தார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தின்படி ஆயிரம் காலன்களுக்கு சராசரி 1.30 பைசா ஆகும். ஆனால் மின்சாரத்தைப் பயன் படுத்தி கடல் நீரைக் குடிநீராக்கினால், ஆயிரம் காலன்களுக்கு 2 ரூபாய் முதல் 4 ரூபாய்வரை செலவாகும் என்று சொல்லப்படுகிறது. எனவே செலவு இரண்டு பங்கு மூன்று பங்கு அதிகமாகும் என்ற காரணத்தினாலே தற்சமயத்தில் அந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு கிராம அலுவலர் சங்கம்

* 156. வினா.—**திரு. எஸ். இராமச்சந்திரன்** : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாண்புமிகு முன்னாள் உணவு அமைச்சர் அவர்களைத் தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கப் பிரதிநிதிகள் 1967 டிசம்பர் திங்களில் சந்தித்து கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பத்தை கொடுத்தனரா ?